பொருளியல்

பல்தேர்வு வினாக்கள்



e-தக்சலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa



1. பணத்தை பிற சொத்துக்களிலிருந்து காட்டும் காரணி எது?
    1. கொண்டு செல்வதற்கு வசதியானது
    2. திரவத்தன்மை
    3. களஞ்சியப்படுத்துவது
    4. அரசாங்க உத்தரவாதம்
    5. அருமையானதாக இருக்கும்

2. பணத்தினை கையில் வைத்திருப்பதனால் ஏற்படும் அமையச்செலவு யாது?
    1. களவு மற்றைய ஆபத்துக்கள் என்பனவற்றின் செலவு
    2. வருமானம் உழைக்கும் சொத்தின் மீது பணம் முதலீடு செய்யப்பட்டிருப்பதால் கிடைக்கக் கூடிய வருமானம்
    3. கைவிடப்பட்ட நுகர்வு
    4. கடன் பெறுதல் கடன் கொடுத்தல் ஆகியவற்றின் கொடுக்கல் வாங்கல் செலவுகள்

3. பின்வருவனவற்றுள் எது பணத்தின் ஒரு தொழிற்பாடு அன்று?
    1. மாற்றாடகம்
    2. கணக்கீட்டு அலகு
    3. பணவீக்கத்திற்கெதிரான பாதுகாப்பு
    4. பெறுமானத்திரட்டு
    5. பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியமம்

4. உத்தேச நோக்கில் பணத்திற்கு ஏற்படுத்தப்படும் கேள்வி
    1. வருமானத்துடன் நேரான தொடர்பைக் கொண்டிருக்கும்
    2. வருமானத்துடன் எதிரான தொடர்பைக் கொண்டிருக்கும்
    3. வட்டி வீதத்துடன் நேரான தொடர்பைக் கொண்டிருக்கும்
    4. வட்டி வீதத்துடன் எதிரான தொடர்பைக் கொண்டிருக்கும்
    5. விலை மட்டத்துடன் எதிரான தொடர்பைக் கொண்டிருக்கும்

5. பின்வருவனவற்றில் எச்சந்தர்ப்பத்தில் பொது மக்களிடமுள்ள பணக்கேள்வியானது குறைவடையலாம்?
    1. வட்டி வீதம் மாறாத போது பங்குகளின் விலை உயர்வடைதல்
    2. வட்டி வீதமும் பங்குகளின் விலையும் வீழ்ச்சியடைதல்
    3. வட்டி வீத வீழ்ச்சியின் போது பங்குகளின் விலை உயர்வடைதல்
    4. வட்டி வீதம் உயர்வடைய பங்குகளின் விலை உயர்வடைதல்
    5. பங்குகளின் விலை வீழ்ச்சியடைய வட்டி உயர்வடைதல்

தொகுப்பு : திரு.ச.ஜெயக்குமார், ஆசிரியர் - பொருளியல், யா/வயவிளான் மத்திய கல்லூரி

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர் - த.தொ.தொ, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

6. பின்வருவனவற்றுள் M_{2b} என்பதனுள் உள்ளடங்காதது எது?
   1. பொது மக்களிடமுள்ள புழக்கப்பணம்
   2. மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கியின் வைப்புக்கள்
   3. வணிக வங்கியிலுள்ள பொதுமக்களின் கேள்வி வைப்புக்கள்
   4. வணிக வங்கியிலுள்ள பொது மக்களின் சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்கள்
   5. வதியாதோர் செலாவணி வைப்புக்களின் 50%

7. ஒதுக்குப்பணம், பணநிரம்பல் என்பவற்றிற்கிடையிலான முக்கிய வேறுபாடு
   1. ஒதுக்குப்பணத்திற்குள் மட்டும் பொது மக்களிடமுள்ள காசு உள்ளடக்கப்பட்டிருத்தல்
   2. வணிக வங்கியிலுள்ள கேள்வி வைப்புக்கள் பண நிரம்பலுக்குள் மட்டும் உள்ளடக்கப்பட்டிருத்தல்
   3. மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கி வைப்புக்கள் பணநிரம்பலுக்குள் மட்டும் உள்ளடக்கப்பட்டிருத்தல்
   4. வங்கிகளுக்கிடையிலான வைப்புக்கள் பணநிரம்பலுக்குள் மட்டும் உள்ளடக்கப்பட்டிருத்தல்
   5. ஒதுக்கு பணத்திற்குள் மட்டும் வணிக வங்கியிலுள்ள சேமிப்பு, தவணை வைப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல்

8. பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன.

   பண நிரம்பல் 5000
   பொதுமக்கள் வசமுள்ள நாணயம் 1500
   காசு ஒதுக்கு விகிதம் 10%
   வணிக வங்கிகளிடமுள்ள கேள்வி வைப்பு 3500
   வணிக வங்கிகளிடமுள்ள மிகை ஒதுக்கீடு 200

மேற்கூறிய தரவுகளிடமிருந்து உயர்வலுப்பணத்தின் அளவைக் காண்க?

1. 2200 2. 1850 3. 2050 4. 5200 5. 2000

தொகுப்பு : திரு.ச.ஜெயக்குமார், ஆசிரியர் - பொருளியல், யா/வயவிளான் மத்திய கல்லூரி

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர் - த.தொ.தொ, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

9. இலங்கையின் பணக்கூட்டுக்கள் தொடர்பான பின்வரும் தரவுகள் உமக்கு தரப்படுகின்றன.

அடிப்படைப்பணம் 300
வணிக வங்கிகளிடமுள்ள புழக்கப்பணம் 80
மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கி வைப்புக்கள் 30
வணிக வங்கியிலுள்ள பொது மக்களின் கேள்வி வைப்புக்கள் 120
வணிக வங்கியிலுள்ள பொதுமக்களின் தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் 400

மேற்படி தரவுகளில் அடிப்படையில் பொருளாதாரத்தின் குறுகிய பணநிரம்பல்(M1) மற்றும் விரிந்த பணநிரம்பல்(M2) என்பன முறையே

1. M1 = 190 , M2 = 620
2. M1 = 310, M2 = 710
3. M1 = 190 , M2 = 590
4. M1 = 470 , M2 = 870
5. M1 = 170 , M2 = 570

10. பணமானது கடன்களைப் பெறவும் அவற்றை மீளச் செலுத்துவும் வசதியளிக்கின்றது. பணத்தின் இப் பணியானது?

1. பொறுமானத்திரட்டுத் தொழிற்பாடு
2. பிற்போடப்பட்ட கொடுப்பனவுத் தொழிற்பாடு
3. கணக்கீடு அலகுத் தொழிற்பாடு
4. பொதுமக்களின் நியமத்தொழிற்பாடு
5. பரிமாற்றூடகத் தொழிற்பாடு

11. பணவீக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய கேள்விப்பக்க காரணியாக அமைவது.

1. பொது முதலீட்டில் ஏற்படும் வீழ்ச்சி ஆகும்
2. வட்டி வீதத்தில் ஏற்படும் ஓர் வீழ்ச்சியாகும்
3. அரசாங்க கொள்வனவில் ஏற்படும் ஓர் வீழ்ச்சியாகும்
4. அரசாங்க வரிவிதிப்பில் உண்டாகும் ஓர் அதிகரிப்பாகும்
5. இறக்குமதிகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும்

12. பணவீக்க வீதம் படிப்படியாக வீழ்ச்சியடைவது

1. பணச்சுருக்கம் ஆகும்
2. பணவீக்க வீழ்ச்சியாகும்
3. பொது விலைமட்டத்தின் வீழ்ச்சியாகும்
4. பணவீக்க அகல்வு ஆகும்
5. பணச்சுருக்க மின்மையாகும்

தொகுப்பு : திரு.ச.ஜெயக்குமார், ஆசிரியர் - பொருளியல், யா/வயவிளான் மத்திய கல்லூரி

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர் - த.தொ.தொ, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

13. தற்போது மக்களின் வாழ்க்கைச் செலவினை அளவிடுவதற்குப் பயன்படும் விலைக் குறிகாட்டியாக அமைவது
    1. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணாகும்
    2. உற்பத்தியாளர் விலைச்சுட்டியாகும்
    3. உள்ளார்ந்த மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கியாகும்
    4. நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகும்
    5. பொது விலைமட்டச் சுட்டியாகும்

14. பொருளாதாரமொன்றின் பணநிரம்பல் 20 சதவீதத்தினாலும் சுழற்சி வேகம் 10 சதவீதத்தினாலும் அதிகரித்தது. மற்றவைகள் மாறா நிலையில் பொது விலைமட்டம் எவ்வளவால் அதிகரிக்கும்.
    1. 20 சதவீதம் அதிகரிக்கும்
    2. 30 சதவீதம் அதிகரிக்கும்
    3. 32 சதவீதம் அதிகரிக்கும்
    4. 42 சதவீதம் அதிகரிக்கும்
    5. 22 சதவீதம் அதிகரிக்கும்

15. நாணயக் கணியக் கோட்பாட்டின்படி பெயரளவுப் பணநிரம்பலில் ஏற்படும் 2% அதிகரிப்பு
    1. மெய்ரீதியாக உற்பத்தியை 2% தால் அதிகரிப்பு
    2. மெய்வட்டி வீதத்தினை 2% தால் அதிகரிப்பு
    3. பொது விலைமட்டத்தினை 2% தால் மாற்றும்
    4. பொது விலைமட்டத்தினை 2% தால் அதிகரிக்கும்
    5. பொருளாதாரத்தை 2% தால் வளர்ச்சியடையச் செய்யும்

16. வணிக வங்கியொன்று 25% ஒதுக்கு வீதத்தில் இயங்கும் நிலையில் மக்களிடம் இருந்து 1000 மில்லியன் வைப்பைப் பெறுமாயின் இவ்வைப்பின் பேரில் வங்கி உருவாக்கும் புதிய வைப்பின் அளவு
    1. 4000
    2. 750
    3. 1000
    4. 250
    5. 500

17. வணிக வங்கியிடம் உள்ள திரவச் சொத்துக்களில் அதிகுறைந்த திரவத்தன்மையான சொத்தொன்று பின்வருவனவற்றில்
    1. கடன்கள்
    2. முதலீடு
    3. திறைசேரி உண்டியல்கள்
    3. நாணய வடிவிலான ஒதுக்கு

18. பின்வரும் கூற்றுக்களில் நீர் ஏற்க முடியாதது என கருதுவது
    1. தேசிய சேமிப்பு வங்கிகடன் வழங்க முடியும்
    2. வணிக வங்கிகள் நிதி இடையீட்டாளரின் ஒரு வகையாகும்
    3. வணிக வங்கிகள் மட்டுமே பண ஆக்க ஆற்றல் உடையவை
    4. வணிக வங்கிகள் அல்லாதவை கடன் வழங்க முடியாது
    5. வணிக வங்கிகள் பொருளாதாரத்தில் பணத்தை உண்டு பண்னுகின்றன.

தொகுப்பு : திரு.ச.ஜெயக்குமார், ஆசிரியர் - பொருளியல், யா/வயவிளான் மத்திய கல்லூரி

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர் - த.தொ.தொ, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

19. ஒரு வங்கியை மட்டும் கொண்ட வங்கிமுறைமையொன்றில் ஒதுக்கு வீதம் 10% ஆக உள்ள நிலையில் 500 மில்லியன் வைப்பு பெறப்படுமாயின் வங்கி முறைமை உருவாக்கும் மொத்த கடனின் அளவு

1. 5000 2. 500 3. 450 4. 4500 5. 400

20. வணிக வங்கிகள் மற்றைய நிதி அமைப்பிலிருந்து வேறுபடுவது

1. கேள்வி வைப்புக்களை ஏற்றுக் கொள்ளல்
2. சேமிப்பு, நிலையான வைப்புக்களை ஏற்றல்
3. கடன் வழங்குதல்
4. தன்னிச்சையாக தொழிற்படக்கூடியவை
5. நிதி இடைத்தரகர் இல்லாமை

21. இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் நாணயக் கொள்கையின் இறுதிக் குறிகோள் யாது?

1. வருமான ஏற்றத்தாழ்வை நீக்குதல்
2. விலை உறுதியைப் பேணுதல்
3. நிதியில் முறை உறுதியைப் பேணுதல்
4. உள்ளக வெளியகச் சமநிலையைப் பேணுதல்
5. விலை மற்றும் பொருளாதார உறுதியைப் பேணுதல்

22. நாணயக் கொள்கையின் கொள்கை வட்டி வீதத்திற்குள் உள்ளடங்கும் விடயம் ஒன்று

1. பகிரங்க சந்தை நடவடிக்கை
2. நியதி ஒதுக்கு வீதம்
3. தெரிவு செய்யப்பட்ட கடன்களுக்குரிய வட்டி வீதம்
4. துணை நில் வைப்பு வீதம்
5. மீள் நிதியிடல் வசதி

23. மத்திய வங்கியினால் அரசாங்கப் பிணையங்களை (Securities) வணிக வங்கிகளுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கை

1. வட்டி வீத வீழ்ச்சிக்கு ஏதுவாகும்
2. வணிகவங்கிகளின் காசொதுக்குகள் வீழ்ச்சியடைய ஏதுவாகும்
3. பணநிரம்பல் அதிகரிக்க ஏதுவாகும்
4. வணிக வங்கிகளால் பொதுமக்களுக்கு வழங்கும் கொடு கடன்கள் அதிகரிக்க ஏதுவாகும்
5. வணிக வங்கிகளின் காசொதுக்குகள் அதிகரிக்க ஏதுவாகும்.

தொகுப்பு : திரு.ச.ஜெயக்குமார், ஆசிரியர் - பொருளியல், யா/வயவிளான் மத்திய கல்லூரி

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர் - த.தொ.தொ, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

24. பணக்கொள்கைக் கருவிகள் மூன்று அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. இம்மூன்றும் பொருளாதாரத்தைச் சுருங்கச் செய்யப் பயன்படுத்தப்படுமாயின் பின்வரும் எந்தச் சேர்க்கையினால் அது சாத்தியமாகும்

	வட்டி வீதம்	திறந்த சந்தை நடவடிக்கை	நியதி ஒதுக்குத் தேவை
1.	அதிகரிப்பு	ஆவணங்களை விற்றல்	அதிகரிப்பு
2.	அதிகரிப்பு	ஆவணங்களை விற்றல்	குறைப்பு
3.	அதிகரிப்பு	ஆவணங்களை வாங்குதல்	அதிகரிப்பு
4.	குறைப்பு	ஆவணங்களை வாங்குதல்	அதிகரிப்பு
5.	குறைப்பு	ஆவணங்களை வாங்குதல்	குறைப்பு

25. மத்திய வங்கி தனது துணைநில் வைப்பு வீதத்தை பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய மாற்றத்தில் மிகப் பொருத்தமானது

1. அழைப்புச் சந்தைக்கடன் வட்டிவீதம் கீழ்நோக்கி அசையும்
2. அழைப்புச் சந்தைக்கடன் வட்டிவீதத்தின் மேல் எல்லையாக அமையும்
3. அழைப்புச் சந்தைக்கடன் வட்டிவீதம் மேல்நோக்கி அசையும்
4. வங்கிகளின் பணச்சந்தை வட்டி வீதம் குறையும்
5. வங்கிகளின் கடன் ஆற்றல் அதிகரிக்கும்.

தொகுப்பு : திரு.ச.ஜெயக்குமார், ஆசிரியர் - பொருளியல், யா/வயவிளான் மத்திய கல்லூரி

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர் - த.தொ.தொ, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

1. வங்கி முறைமையொன்றில் ஒதுக்கு வீதம் 10% எனவும், நாட்டின் பணநிரம்பல் 5000 மில்லியன் எனவும் கொள்க. பொது மக்களின் புழக்கத்தில் உள்ள சட்டமுறைப் பணத்தின் அளவு 1000 மில்லியன் ஆகவும் உள்ளது. வங்கி முறைமையில் உள்ள மிகை ஒதுக்கு 200 மில்லியன் ஆகவும் உள்ளது.

    1. வங்கி முறைமையின் நிதி நிலைமைக் கூற்றை தயாரிக்குக

    2. மிகை ஒதுக்கு சீராக்கப்பட்ட பின் பண நிரம்பல் மட்டம்

தொகுப்பு : திரு.ச.ஜெயக்குமார், ஆசிரியர் - பொருளியல், யா/வயவிளான் மத்திய கல்லூரி

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர் - த.தொ.தொ, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

2. வங்கி முறைமையொன்றில் உள்ள வங்கியொன்றில் ஐந்தொகை வருமாறு

வைப்பு	10000	ஒதுக்கு கடன்	1200 8800
	10000		10000

இவ்வங்கியில் உள்ள மிகை ஒதுக்கு 200 மில்லியன் எனவும், மக்களின் கைகளில் உள்ள சட்டமுறைப் பணத்தின் அளவு 1500 மில்லியன் ஆகவும் உள்ளது.

1. இவ்வங்கி வழங்கக் கூடிய புதிய கடனின் உச்ச அளவு யாது?

2. சீராக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்று

3. வங்கியில் வைப்பிடப்பட்ட புதிய கடனின் காசோலை வங்கிக்கு எதிராக தீர்ப்பனவு செய்யப்படுமாயின் சீராக்கப்பட்ட நிதி நிலமைக் கூற்று

தொகுப்பு : திரு.ச.ஜெயக்குமார், ஆசிரியர் - பொருளியல், யா/வயவிளான் மத்திய கல்லூரி

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர் - த.தொ.தொ, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

3. பணநிரம்பல் 1400 ஆகவுள்ள போது சட்டமுறைப் புழக்கப்பணம் 400 ஆகவும் உள்ளது. வங்கி முறைமையின் ஒதுக்கு வீதம் 10% ஆகவும் உள்ளது.

1. பணப்பெருக்கியின் அளவு

2. தற்போது மத்திய வங்கியின் 100 மில்லியன் கடன் பத்திரங்களை கொள்வனவு செய்யுமாயின் பணநிரம்பலில் ஏற்படும் மொத்ததாக்கம் யாது?

தொகுப்பு : திரு.ச.ஜெயக்குமார், ஆசிரியர் - பொருளியல், யா/வயவிளான் மத்திய கல்லூரி

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா, ஆசிரியர் - த.தொ.தொ, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk